புதினப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

உ

விரோதிஹு (1889) ஆவணிமீ உ௰உ ஆரம்பமானது.

பத்திரிக் கிரயம்.
யாழ்ப்பாணப் பட்டினம் ரூபா. 5 00 | இலங்கை இந்தியா ரூபா. 8 00 | சென்னைப் பகுதி ரூபா. 9 00
இங்கிலாந்து ரூபா. 9 00 | இங்கிலாந்து ரூபா. 12 00 | இங்கிலாந்து ரூபா. 13 00

# இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்".

"சீர்பூத்த கருவிஜ ஞணர்ச்சி தேங்கள் வெம்பூத்த கொக மங்க மோங்கப், பார்பூத்த புறச்சமய விருள் ஸீங்கப் பரம்பூத்த சைவநெறி தாங்கப், பேர்பூத்த வொனந்த நனிஜ ஞங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த, வார்பூத்த வறிவிர்ச்சை தொழிலென் றேனு மதம்பூத்த விநாயகன்றன் வணங்கி வாழ்வாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

விளம்பர விகிதம்.
முதலாம் முறை ... ஒரு அங்குலம் ரூபா 10-00.
... ரூபா 5-50.
... ரூபா 4-00.
விளம்பரங்கள் முற்பணமாகவே அனுப்பப்படல் வேண்டும்.

புத்தகம்—சடு } யாழ்ப்பாணம்:— ஸ்ரீமுகஹு மார்கழிமீ உ௰௨; (1934 ஜனவரி 11) வியாழக்கிழமை. { இலக்கம்—எரு

## அன்புருவினராய கண்ணப்பனார்.

[தமிழாசிரியர் ஜ. இராஜு முதலியார்]

(8-1-34-ன் தொடர்ச்சி.)

நினைவும் ஒருவிதமாக உண்டாகித் திண்ணனாரின் கண்கள் திறந்தன. அலறியெழுந்தார். கண்களினின்றும் ஒழுகிய நீரால்முழுகினர். இடியொலியாற் தாக்கப்பெற்ற சிங்கமென வாய்விட்டலறினார். கல்லெனவுரம்பெற்ற கைகளால் முகமெலாம் மொத்திக்கொண்டார். அதனால் முகமெலாம் உதிரம் பொங்கிற்று. தலையைப் பாறைகளில் மோதினார். ஓடுவார்; மீள்வர் எழுவர்; விழுவர்; விம்மலுற்று நெடுநேரம் பிரமித்து நிற்பர்; நெட்டுயிர்ப்புக் கொள்வர்; கைகளைக் கற்களில் மோதுவர்.

குடுமியப்பரை யணுகி ஒழுகும் இரத்தத்தைப் பன்முறை துடைப்பர். குருதி நிற்காமைகண்டு உடல்நடுங்கக் குழந்தையைப்போலழுவார். 'மலையிற்கிடைத்த மணியே! குருதியொழுகுங் காரணமென்ன?' என வினவுவார். விடைபெறாமல் வருந்துவர்.

பின்னர், வீணே பரிகாரஞ் செய்யாமல் வருந்துவதால்மட்டும் பயனில்லையெனத் தேர்ந்து, மலைச் சாரலிற் கண்ணோயைத் [illegible] சில பல கொணர்ந்து சாறெடுத்துக் கண்ணிற் பிழிந்தனர். குருதி யடங்கிற்றில்லை. பயனில்லாமை கண்டு திகைத்தார். 'பாவியெனக்கின்னுற்ற பரிபவந் தீர்ந்திலேனே!' என அரற்றினர். அச்சமையத்தில், 'ஊனுக்கு ஊனிடல்வேண்டும்' என்னும் மறவர் வழக்கொன்று மனத்தில் ஒளிர்ந்தது. அதனையுஞ் செய்து பார்ப்போம் என்று எண்ணி அக்கானவர்பெருமான் உறுப்பிற் சிறந்த தங்கண்களி னொன்றை அம்பு கொண்டு அகழ்ந்து எடுத்துக் குடுமியப்பரின் வலக்கண்ணிற்கொண்டு சார்த்தினார்! உலகிடை நிகழாப் பரிகாரம்!

சிவபெருமானுக்கருச்சனை புரியும் வண்ணம் வைத்திருந்த ஆயிரந் தாமரை மலர்களில் ஒன்று குறைய, அதனாற் பூசை குறைந்துவிடுமென் றெண்ணித் தமது கண்ணொன்றை யிடந்திட்ட கண்ணபிரானையொத்தனர் திண்ணனார். நோய்வாய்ப்படாமல் அன்பின் வாய்ப்பட்டொழுகிற குருதியாதலால், திண்ணனாரின் கண் சார்த்தப்பட்டவுடனே குருதியும் நின்றது. என்னே அன்பின் வலிமை!

ஒற்றைக் கண்ணரான திண்ணனார் கண்டனர் குருதி நின்ற காட்சியை. அச்சமையம் அவருக்குண்டான மகிழ்ச்சியை யளவிடல் எம்போலியரால் இயைந்ததன்று. துயர்க் கடலினின்றுங் கரையேறி மகிழ்ச்சிக் கடலின் மூழ்கினார். துயரාற் பரவசராயிருந்த அவர் மகிழ்ச்சியாற் பரவசராயினர், நாற்புறமும் ஓடினார்; ஆடினார்; பாடினார். துயரக்கண்ணீர் நீங்கி உவகைக் கண்ணீர் வார்ந்தது. துயரத்தா லிளைத்த வுடல் மகிழ்ச்சியாற் பூரித்துப் பருத்தது. முழவையொத்த புயங்களைக் கொட்டி யார்த்தனர். 'நன் மருந்து கண்டேன். எம்பெருமானுக்குற்ற நோயைப் போக்கும் பேறுகொண்டேன். என் செய்கையே பொன்னனைய செய்கை' என்று வியந்து கூறினார்.

எனினும், அவ்வுவகை நீடிக்கவில்லை. படுகுழியில் வீழ்ந்து நெடுநாள் வருந்திய மதயானை ஒருவாறு வெளியேறி, மற்றுமோர் படுகுழியில் வீழ்ந்தமை போன்று மற்றுமோர் துயரக்கடலைக்கண்டார்! குடுமியப்பர் தம் மிடக்கண்ணினின்றும் உதிரஞ் சோரநின்றனர்! கண்டனர் ஒற்றைக் கண்ணர். நெடிது வருந்தினர். சோகத்தாற் பலவாறு புலம்பினர். ஆயினும் மருந்து கண்டனராதலால் 'விரைவில் அதனை நீக்குவேன்' என்று துணிந்தார். தம் மற்றொரு கண்ணையும் அம்பினால் அகழ்ந்தெடுத்து வைக்க நிச்சயித்தார். சிவபெருமானுடைய கண்ணை யறிதற்காகத் தம்முடைய பாதரக்ஷையணிந்துள்ள காலை அவ்வுதிரமொழுகுங் கண்ணருகில் வைத்துக் கொண்டார். அம்பினையேந்தி அருமையான தம்முடைய ஒற்றைக் கண்ணையும் அகழ வைத்தார். என்ன கொடுமை! எத்தகைய சோதனை!

சோதனைக்கும் அளவுண்டென்றே? அன்பே வடிவமாகவுள்ள திண்ணனாரின் மனத்திண்மை கண்டு கலங்கினார். தாழ்த்திருப்பின் துயர்மிகுமென்று தளர்ந்து நெகிழ்ந்தனர். தம் மக்களின் துயரையாற்றுவதற்கு விரையும் அப்பெருமான் அவ்வாறே திண்ணனாரின் கொடுஞ் செயலையுந் தடுக்க விரைந்தனர்.

சிவபெருமானைப் பிரதிட்டித்துள்ள சிவலிங்கத்தினிட மிருந்து ஒரு செங்கரம் அன்புவடிவுடன் திண்ணனார் கையைச் சிக்கெனப் பிடித்தது. அந்த சமையத்தில், 'நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என் அன்புடைத்தோன்றல்! நில்லு கண்ணப்ப!' என்றொரு இன்னுரை அச்சிவலிங்கத்திடையெழுந்தது.

பின்னர்ச் சிவகோசாரியாரின் கனவிற்றோன்றிய அக்காட்சி திண்ணனாரின் முன்னர் நனவிற்றோன்றியது! அழகிய பேரொளியையுடைய அக்காட்சியை நமது கண்ணப்பரென்னுங் காரணப் பெயரினர் கண்டனர். உவகையை விழுங்கமாட்டாராய்த் திகைத்தனர். அன்பா லுடலுருக, நாவார வாழ்த்தினர் அவ்வுருவை. சிவபெருமான் கண்ணப்பரைத் தம் அருகழைத் தணைத்துக் கொண்டு கண்களைத்தடவி ஒளிபெறச்செய்தனர். உடம்பெலாம் புளகமுறத்தழுவி யுச்சிமோந்து, 'கண்ணப்ப! நீ எம்பக்கலில் ஆறு நாளு மிருந்தமைபோல இருந்தமைந்து ஆறியிரு' எனப் பவளத்திருவாயான் மலர்ந்தனர். கண்ணப்பரும் அழகிய சிலையேந்திய கையினராகச் சிலைவடிவுகொண்டு இருந்தனர்.

கண்ணப்பரன்பையுங் கனவிடைக்கண்ட கோலத்தையுங் கண்களார ஒருமிக்கக் கண்டானந்த மெய்தினர் சிவகோசாரியர். 'காலமெலாம் பூசனை புரிந்தேன்; கண்மணியான கங்காதரனைக் காணும் பேறு பெற்றிலேன். ஆறு நாளில், ஆறுதரித்த அணி சடையனை யகங்குளிரக் கண்டனர் வேடனார்! அன்புருவாய இவ்வேடனாரைப் பொல்லாத வேடனென்றிகழ்ந்தேன். அப்புன்மைதீர ஆனுடைய குடுமியப்பரையும் ஆனுடைய கண்ணப்பரையும் அணிமலர்கொண் டருச்சிப்பேன்' என்று இருவரையும் வணங்கியெழுந்து பூசனை புரிந்து சென்றனர். பின்னர்ப் பிரதிதினமும் பிழைபறப் பூசித்துப் பேறுபெற்றனர் பிராமணர்.

இக்கண்ணப்பனாரின் வரலாற்றால், அன்பே சிவம் என்பது வெள்ளிடை மலையென விளங்குகிறது.

"மறை நான்கும் பயின்றொழுகி இட்டிகளும்
பலவியற்று மல்லன் ஞாலத்தில்
இறவாத புகழ்படைத்தும் ஈசனிடத்
தன்பிலரை யெண்ணு தன்னம்
புறமோதிச் சொலையின்று மதுமார்தல்
கொடும்பாவப் புலையரேனும்
அறவாணன் திருவடிக்கீழ் அன்பினரேல்
அவரெம்மை யடிமை கொள்வார்."

## இந்தியச் செய்திகள்.

### வந்துவிட்டார்!

சென்ற வியாழக்கிழமையன்று ஸ்ரீ எம். ஆர் ஐயங்கார் பம்பாயில்வந்து இறங்கினார். இறங்கியதும் "மகாத்மா எப்படி? சவுக்கியமா யிருக்கிறாரா?" என்று பத்திரிகை நிருபர்களை அவர் ஆவலுடன் கேட்டார். அடிகள் சுகமேயிருக்கிறார் என்பதை அறிந்து அவர் அகமகிழ்ந்தாராம். அவர் பிரிட்டிஷ் அரசினர் விடுத்துள்ள வெள்ளை அறிக்கையைப் பற்றிப் பின்வருமாறு கூறினார்:-

"வெள்ளை அறிக்கை இந்தியமக்களிற் பெரும்பாலாரால் வெறுத் தொதுக்கப்பட்டிருக்கிறது. அது மூலமாக நிர்மாணிக்கப்படும் அரசியலை நடத்துவது யார் என்னும் கேள்வியே எம்மைக் கஷ்டத்திற்குள்ளாக்கிவிட்டிருக்கிறது. வட்டமேசை மகாநாட்டிற்குச் சென்ற எமக்குத் தேசமுழுவதும் ஏகோபித்து இன்னதைச் செய்யும்படி கட்டளையிடவில்லை. நாட்டின் பொதுநல் செல்வாக்குள்ள கட்சிகள் யாவும் ஒன்று சேர்ந்து தம் கொள்கை இன்னதென்பதை வற்புறுத்தி அதன்படி ஓர் திட்டத்தைத் தயாரிக்குமானால், ஏதும் நன்மை விளையக்கூடும். இதுவிஷயத்தில் மகாத்மா ஒருவரே தகுதியுடையவர்; அவர் எம்மோடு ஒத்துழைக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்."

டச்சோக்கி ஐயங்கார் இதே பல்லவியைத்தான் அன்றுதொட்டு இன்றுவரை பாடிவருகிறார். எனவே அவரின் கூற்று எவர்க்கும் ஆச்சரியத்தை விளைக்காது!

### சர்வகட்சி மகாநாடு.

சர்வகட்சி மகாநாடு ஒன்றை எப்போது கூட்டுவது என்பதுபற்றி ஆலோசிப்பதற்காகத் தலைவர்கள் பலர் சென்ற சனிக்கிழமை பம்பாயிற் கூடினர். மிஸ்டர் எம். ஏ ஜின்னா தாம் தலைவராய் வருவது பற்றி ஒருவிடையும் இற்றைவரை அனுப்பாமையினால், அதனைப் பெற்றபின்னரே மகாநாட்டுத் தேதி நிர்ணயிக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது. மிஸ்டர் ஜின்னா தலைமை வகிக்க உடன்படுவாரென்று நம்பப்படுகிறது.

அரசனை நம்பிய புருஷனைக் கைவிட்டவன் நிலைமையில் உள்ள ஜின்னா, வகுப்புவாதிகளின் சிரோரத்தினமாய் விளங்கிய ஜின்னா, 14நிபந்தனைகளை விதித்து இந்து-முஸ்லீம் பிழவை அதிகப்படுத்திய ஜின்னாவின் தலைமையால் ஏற்படும் நன்மைதான் என்னையோ?

### மகாத்மாவின் திக்குவிஜயம்.

மகாத்மா காந்தியடிகள் மைசூர் சமஸ்தானத்திலுள்ள அநேக இடங்களுக்குச் சென்றனர். அடிகள் சென்ற சென்ற இடங்களிலெல்லாம் தோட்டி முதல் தொண்டைமான்வரை மக்கள் லட்சக்கணக்காக நின்று வரவேற்று, தீண்டாதார் நலங்கருதிப் பல்லாயிரக் கணக்காகப் பண உதவி செய்தனர். மாட்டூர் என்னுமிடத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கண்முன்னிலையில் அடிகளார் "தீண்டாமையும் ஹிந்துமதமும்" என்பது பற்றிப் பின்வருமாறு கூறினார்:-

"உங்களுக்குள்ளே தீண்டாமை யென்னும் பசாசு இன்னும் நடமாடிக்கொண்டிருக்குமானால், அதை இன்றே அகற்றிடுங்கள்; இந்தத் தீண்டாமைப் பசாசுக்கும் ஹிந்து மதத்திற்கும் முழுவிரோதமாகும். ஒன்றில் நீங்கள் தீண்டாமையை ஒழிக்க வேண்டும்; அன்றேல் ஹிந்துமதத்தை ஒழிக்க வேண்டும். எதைச் செய்யப் போகிறீர்கள்?"

மாண்டிய என்னுமிடத்தில் அடிகளார் முகதெரிசனம் காணவேண்டி நின்ற

(ஏனைய பிந்திய இந்தியச் செய்திகளை ...-ம் பக்கத்திற் பார்க்குக.)

## பிரதிநிதிகள் யார்?

—(o)—

### எஜமானரா? ஊழியரா?

—o—

### அவர்களைத் தெரிவுசெய்யும் முறை

சென்ற சனிக்கிழமை நடந்த வரிஇறுப்போர் மகாநாட்டிற்கு 6-ம்வட்டாரப் பிரதிநிதியான ஸ்ரீ. க. இயாத்துரை அவர்கள் எழுதிய கடிதம் வருமாறு:-

எங்கள் இந்நாட்டில் மகாநாடுகள் மலிந்திடுகின்றன. தீர்மானங்களும் நிர்ணயங்களும் பொலிந்திருக்கின்றன.

உங்கள் மகாநாடு என்றும் நிலைபெற்று இந்நகரத்துக்குப் பயன்படக் கூடியதாயிருக்க எம்பெருமான் அருள் சுரக்கும் வண்ணம் யான் என்னுளன்றி வழுத்துகின்றேன்.

நகரவரிசிகள் வரியிறுப்போர் மத்திய சங்கம் தாபிக்கிறதாக அறிந்தேன். நகரவாசிகள் ஒவ்வொரு வட்டாரத்தாருக்கும் ஒவ்வோர் பிரதிநிதியை அனுப்பியபோதும் அவர்கள் தத்தம் வட்டாரத்துக்கும் பிறருக்கும் செய்யும் சேவையை காலத்துக்குக் காலம் ஆராய்ந்து அவர்கள் செய்வது தவறெனக்காணில் அவர்களுக்கு அச்சரிபிழைத்தைக் காட்டல்வேண்டும். தெருக்களிலும் சந்திகளிலும் கூடிப் பேசலினால் பயனில்லை. நகர பரிபாலன சங்கத்தார் செய்யும் தீர்மானங்கள் அல்லது அங்கத்தவர்கள் பிரேரிக்கும் பிரேரணைகள் ஆதரிக்காமலும் அங்கீகரிக்காமலும் விடுதல் உங்களுக்கு நீதியீனமெனக் காணப்படின் நீங்கள் உங்கள் அபிப்பிராயத்தைச் சங்கத்தாருக்கு வெளியிடவேண்டியது.

நகரம் திருத்த மடையவேண்டின் வரியிறுப்போரும் சபை அங்கத்தவர்களும் உத்தியோகஸ்தரும் ஒத்துழைக்கவேண்டும்.

நகரம் திருத்த மடையவேண்டியதற்கு முக்கியமானமுதற் தகுதியான அங்கத்தவர்களைத் தெரிவு செய்தலேயாகும்.

ஒருவர் தனக்காகச் சீவித்தல் மத்திமம்; தன்னுயிர்போலும் மன்னுயிரோம்பி தன் பொருள் போலப் பிறன் பொருளைப் பேணி தனக்குப் பிறர் எவ்விதம் நடக்க விரும்புவாரோ பிறருக்குத் தான் அவ்விதம் நடத்தல் உத்தமம்.

சனசமூக சேவையெனப் பிதற்றி தனக்கே வாழா நிற்றல் அதமம்.

ஆதலின் நீங்கள் அங்கத்தவரைத் தெரியும் சேவையில் முகம்பாராது ஓரம் பேசாத எவர் சனசமூக வாழ்க்கையில் நேராகவும் பட்சபாதமில்லாமலும் அநுதாபத்துடன் சேவை செய்வாரோ அவரையே தெரிதல் வேண்டும்.

நகர பரிபாலனம் உங்கள் பொறுப்பிலுள்ளது. நீங்களே சுயாட்சியத்தின் ஆண்மை தேண்மைக்கு காரணம்.

சற்றுநேரச் சுகத்திற்காகப் பார்த்துத் தகுதியற்ற சுயநலம் கருதும் சிறுமனிதரை அங்கத்தவர்களாக அனுப்பாதீர்கள்.

சனசமூக சேவை செய்ய முற்பட்டு வருவோர் தங்கள் தங்கள் சுயநலத்துக்காகவா? அல்லது யோக்கியதையை விரும்பிப் பொது நலங்கருதியோ? என்னும் ஐயப்பாடு நிகழின், அவ்வண்ணம் முன்வந்தோர் எக்காலத்திலாவது சனசமூக சேவையி லீடுபட்டிருக்கிறார்களா அல்லது தங்களுக்குரிய நலம், சுகம், பொருள், சவுக்கியங்களில் ஏதாவது பிறர்க்கு அர்ப்பணம் பண்ணியிருக்கிறார்களா? என ஆராய்ந்து தெளியவேண்டும்.

இனி சுகாதார விஷயத்தில் உங்கள் உதவி பெரும்பாலும் வேண்டியது.

சுகாதார சேவையில் ஒவ்வோர் இல்லத்துக்கும் மலக்கூடம் வேண்டியதோ, அல்லவோ, என்ற ஐயப்பாடு நிகழுகிறது.

எமது சுதேசியத்துக்குரிய பல வைத்திய சாஸ்திர ஆராய்ச்சியின் பயனாகக் காலத்துக்குக்

(தொடர்ச்சி ௩-ம் பக்கம்.)

## விசேஷ விஞ்ஞாபனம்.

தைப்பொங்கலின் பொருட்டு நமது இந்துசாதனாலயம் விடுதலை செய்யப்படுவதால், அடுத்த திங்கட்கிழமை (15–1–34) ஆங்கில தமிழ் இந்துசாதனப் பிரசுரங்கள் வெளிவரா.

மனேஜர்.


# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஸ்ரீமுகவருஷ மார்கழிமீ உஅவ வியாழக்கிழமை.


## பட்டின சங்கமும் பட்டின வாசிகளும்.

நகரசங்கம் பட்டினபரிபாலன சங்கம் சுகாதாரசங்கம் கிராமச்சங்கம் என்னுமிவைகள் ஊரவர்களாயுள்ளோர் சுயராச்சியத்தைப்பெற்று நடத்துவதற்கு அருகரோ என்பதை அநுபவத்தில் அறிதற்கு அவர்கள் பொறுப்பில் விடப்பட்டுள்ளன என அரசதந்திரிகள் சொல்லக் கேட்டிருக்கிறேம். அது உண்மையானால், இங்குள்ளார் சுயராச்சியத்தைப் பெற விரும்பினால், இப்படியான சங்கங்களை நடத்துவதில் மேற்படி சங்கங்களிலுள்ளோரும் ஊரவர்களும் ஐக்கியப்பட்டு, செய்யவேண்டிய கருமங்களைப் பரஸ்பரம் தேர்ந்து செய்து தாங்கள் சுயராச்சியம் பெறுதற்கு அருகரென்பதையும் இனிமேல் சுயராச்சியத்தை அரசினர் தங்களிடம் ஒப்பிப்பதுதான் தாமதமென்பதையும் அரசினருக்குக் காட்டியல்லவா வைக்க வேண்டும். ஆனால், மேலே சொல்லப்பட்ட சங்கங்களின் பரிபாலன முறைகளையும் சனங்களோடு அவர்கள் ஊடாடும் முறையையும் பார்க்கும்போது அரசாங்க அதிகாரிகளைக் காட்டிலும், அவர்கள் கைக்கொண்டுள்ள சுயேச்சாதிகார முறையைக்காட்டிலும் இவ்வகையான பரிபாலன சங்கத்தார்களின் பரிபாலமுறை கடுமையானதென்றே சொல்லவேண்டியிருக்கின்றது இலங்கையில் இடங்கள்தோறுமுள்ள இவ்வகையான பரிபாலனசங்கத்தினர்க்கும் நகரவாசிகள் பட்டினவாசிகள் கிராமவாசிகட்குமிடையே காலத்திற்குக்காலம் பிணக்கும் மனஸ்தாபங்களும் வெறுப்பும் ஏற்படுதலை நாம் பலவாற்றானும் அறிந்துள்ளேமல்லவா. பரிபாலனசங்கத்தினர் ஊரவர்களால் தெரிவு செய்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகளாயிருப்ப இவ்வாறான விபரீதங்கள் இருபாலர்க்குமிடையில் நேர்வது மனம் வருந்தத் தக்கது; நாட்டின் ஈடேற்றத்திற்கு நேர் விரோதமானது; ஆதலின் இந்தவகையான அபிப்பிராய பேதங்களையும் அநர்த்தங்களையும் ஒழித்து நாட்டின் ஈடேற்றத்தையே பெறுதற்கு இவ்விரு பகுதியாரும் தேர்ந்து கருமம் ஆற்றுதல் வேண்டும்.

சென்றவாரம் முற்றவெளியிலுள்ள படக்காட்சி மண்டபத்தில் யாழ்ப்பாணப் பட்டின வரியிறுப்போர் கூட்டிய மகாநாட்டிற் பலர் பேசிய பிரசாரணங்களையும் விவாதங்களையும் உற்றுநோக்குமிடத்து இப் பட்டின பரிபாலன சங்கத்தினர்க்கும் பட்டின வாசிகட்குமிடையே பரஸ்பரம் விசுவாசமும் நல்லெண்ணமும் இல்லையென்பதை அங்குச் சமூகமாயிருந்தோரெவரும் இலகுவில் உணர்தல் முடியும் இவ்வகையான விபரீதங்கள் நேர்வதற்குப் பிரதான காரணம் பரிபாலன சங்கத்தார் தாங்கள் பட்டின வாசிகளாலே தெரிவு செய்து அனுப்பப் பட்ட பிரதிநிதிகளென்பதை அறவே மறந்தமையாகும். அவர்கள் இப்படியிருக்கவொண்ணாது. தாங்கள் கருமம் ஆற்றும்போது காலம் இடம் பொருள் என்னுமிவைகளை உத்தேசித்து, பட்டினவாசிகளின் நிலைமையை ஆராய்ந்து அவர்களோடு கலந்து அவர்களை உசாவி உள்ளபடி நிலைமையை அறிந்து கருமம் ஆற்றல் வேண்டும். இதனால் பட்டினவாசிகள் நினைத்தபடி யெல்லாம், கேட்டபடி யெல்லாம் செய்யவேண்டுமென்று நாம் சொல்லுகிறேமென எம்மை விபரீதமாகப் பரிபாலன சங்கத்தார் எண்ணிக்கொள்ளவொண்ணாது. பட்டின சங்கத்தாருக்கு அதிகாரமிருந்தாலும் பெருங் கருமங்களை அவர்கள் செய்யத் தொடங்கும் போது பட்டினவாசிகளின் அபிப்பிராயத்தை அறிந்து செய்வதால் வரக்கூடியது நன்மையாம்.

இனி, பட்டினவாசிகளும் பட்டின சங்கத்தார் செய்வதெல்லாம் தங்களுக்கு மாறானவை யென மதித்து நடத்தல் தவறாகும். அவர்கள் செய்யும் நன்மைகளை நன்மை யென்றும் தீமைகளையே தீமை யென்றும் மதித்து, காய்தல் உவத்தல் அகற்றி நடந்து கொள்ளவேண்டும். எவரும் வேணுமென்று பிழை செய்வதும் தீமை செய்வதும் அரிதாம். பிழை நேர்வது பெரும் பான்மையும் அறியாமையினாலே யாகும் இந்த உண்மையைப் பட்டினவாசிகள் எந்த வேளையுந் தம் நெஞ்சத்து வைத்துக் கொள்வரேல், இருபாலார்க்குமிடையே பிணக்கும் வெறுப்பும் அதிகம் நேரா. பட்டின வாசிகள் செய்ய வேண்டியது இன்னுமொன்றுண்டு, தாங்கள் அங்கத்தவர்களைத் தெரிந்தனுப்பும் போது தக்க பிரதிநிதிகளை, தங்கள் குறைகளை உடனுக்குடன் கேட்டும் உணர்ந்தும் நீக்கத்தக்க அபிமானம் வாய்ந்தவர்களை, தாங்களாகவே தெரிவு செய்து அனுப்புதல் வேண்டும். இப்பொழுதுள்ள அங்கத்தவர்கள் தங்களைப் பட்டினவாசிகளைக் கொண்டு தெரிவித்தல்லவா போய்ச் சேருகிறார்கள்; இதனை விடுத்து ஒவ்வொரு வட்டாரத்தும் ஒவ்வொரு சங்கங் கூட்டி அச் சங்கப் பிரதிநிதிகளைத் தெரிந்து, ஒரு மத்திய சங்க வாயிலாகவே பட்டின வாசிகளின் நன்மைக் காகிய கருமங்களைச் செய்யவேண்டும். குறித்த மத்திய சபையே வட்டாரச் சங்கங்களின் அபிப்பிராயத்தையும் கேட்டு ஏக சம்மதமாக, பட்டின சங்கத்திற்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தனுப்புதல் வேண்டும். இப்படிச் செய்வதினால், வீண் செலவு, குரோதம், தகைமையின்மை, சிரமம் முதலியனவற்றை யெல்லாம் தவிர்த்தலாகும். பட்டின சங்கமும் உண்மையான பிரதிநிதித்துவத்தோடு விளங்கும்.

### பொங்கல் மங்கலம்

எங்கும் நிகழுக.

*வருகிற ஞாயிற்றுக்கிழமை (14-1-34) தைப்பொங்கற் புண்ணிய தினமாகும். அத்தினத்திற்கு முந்தியே சைவநன்மக்களெல்லாரும் தத்தம் இல்லத்தைச் சுத்தி செய்து அலங்கரித்து விநாயகர் சூரியன் இந்திரன் முதலாம் தெய்வங்களை உத்தேசித்து இனிது பொங்கல் செய்குக. மகா சங்கராந்தி தொடக்கமான வருஷம் எவ்வகையான தீமையுமின்றித் தமக்கு நன்மையாக முடிதல் வேண்டுமென்றும், புறவிருளைப்போல் அகவிருளும் மடிமை மிடிமை அடிமைத்திறங்களும் ஏனைய தீமைகளும் அறவே நீங்கவேண்டுமென்றும், சுவதந்திரவுணர்ச்சி சாதி சமயம் கலவி செல்வம் என்னுமிவைகள் ஓங்க வேண்டுமென்றும் பிரார்த்தனை செய்து பொங்குக. தரித்திரங் காரணமாகப் பொங்கல் செய்ய இயலா ஏழைகட்குப் பொங்குதற்கான உபகரணங்களை உதவிப் பொங்கச் செய்குக. [உத்தராயண புண்ணியகால வரலாற்றை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்துக் காண்க]*

### தைமாச விசேஷ தினங்கள்.

| | |
|---|---|
| சவ. (14 1-34) | ஞாயிறு, உத்தராயண புண்ணிய காலம், தைப்பொங்கல் |
| உவ (15-1-34) | திங்கள், அமாவாசை விரதம் |
| இவ (18 1-34) | வியாழன், அப்பூதி நாயனார் குருபூசை |
| அவ (21-1-34) | ஞாயிறு, கலிக்கம்ப நாயனார் குருபூசை, காரைநகர் பயறிக்கூடல் சுப்பிரமணியசுவாமி உற்சவாரம்பம் |
| சுவ (23-1-34) | செவ்வாய், மகா பரணி விரதம் (வைரவ விரதம்) |
| கவ (24-1-34) | புதன், கார்த்திகை விரதம் |
| [illegible] (2[illegible]-6-34) | வெள்ளி, கண்ணப்ப நாயனார் குருபூசை |
| கசவ. (27-1-34) | சனி, பிரதோஷ விரதம் |
| கஇவ (28-1-34) | ஞாயிறு, அரிவாட்ட நாயனார் குருபூசை |
| ககவ (29-1-34) | திங்கள், திருக்கோணமலை [illegible]லடிப் பிள்ளையார் உற்சவாரம்பம் |
| கஎவ. (30-1-34) | செவ்வாய், பூரணை விரதம் சந்திர கிரண புண்ணியகாலம் தைப்பூசம் |
| உகவ (3 2-34) | சனி, சண்டேசுர நாயனார் குருபூசை |
| உஉவ (4-2-34) | ஞாயிறு, பருத்தித்துறை [illegible] விநாயகர் உற்சவாரம்பம் |
| உஇவ. (7-2-34) | புதன், திருநீல கண்ட நாயனார் குருபூசை |
| உசவ. (11.2 34) | ஞாயிறு, பிரதோஷவிரதம். |

# மோட்டர்பஸ்பிரயாண நிறுத்தம்.

## சங்கத்தலைவர் சிறையானார்.

## பிணை எடுக்கச் சென்றவர்க்கு அடி?

## பிரயாணிகளுக்குப் பெருங் கஷ்டம்.

சகலரதசகாயச் சங்கம் எனப்படும் மோட்டர்பஸ் முகாமைக்காரர்-சாரதிகளின் சங்கத்தலைவரான ஸ்ரீமான் எதிர்வீரசிங்கம் அவர்கள் சென்ற செவ்வாய்க்கிழமை சிறைப்படுத்தியபடியால், மோட்டர்பஸ் வண்டிகள் யாவும் போக்குவரவை அந்நேரம் தொடக்கம் நிறுத்தியிருக்கின்றன. யாழ்ப்பாணம் பெரியகடையில் உள்ள பஸ்காலை முன்னைய பொலிவு இழந்து இருக்கிறது. 6 பொலிசார் காவல் காத்து வருகின்றனர்.

*நமது சொந்த நிருபர் கீழ்க்கண்ட விபரங்களை எமக்கு அறிவிக்கின்றார்.*

*சென்ற சனிக்கிழமை (30–12—33) யாழ்ப்பாணம் பெரியகடையில் வட இலங்கைச் சகல ரத சகாயச்சங்கத்தின் கூட்டம் ஒன்று கூடியது. அதில் தலைமை வகித்த ஸ்ரீ எ. எதிர்வீரசிங்கம் அவர்கள், ஆங்குக் கூடியிருந்த மோட்டர்பஸ் சாரதிகள் "கண்டக்டர்மார்" முதலியோர் தமது ரதங்களில் பிரமாணத்திற்கு மேற்பட்ட பிரயாணிகளை ஏற்றி அதன்பயனாகப் பொலிசர்க்குச் சில சமையங்களில் கைலஞ்சமும், சில சமையங்களில் நீதிஸ்தலங்களில் அபராதமும் இறுத்தல் சாரதிகள் கண்டக்டர்களாகிய அவர்களுக்கே கெடுதிவிளைக்கும் என்றும், அற்ப இலாபம் கருதி ஈற்றில் அவமானமடையவொண்ணாது என்றும், எல்லா முகமைக்காரரும் ஒன்று சேர்ந்து குறித்த பிரயாண வேதனத்தை ஏற்படுத்தவேண்டும் என்றும் கூறினார். இதன்பின், ஸ்ரீ எதிர்விரசிங்கத்தைத் தலைவராகக்கொண்ட ஓர் சிறந்த நிருவாகசபை தெரியப்பட்டது என்று தெரிகிறது.*

இப்படியிருக்கப் பொலிசார் ஸ்ரீமான் எதிர்வீரசிங்கத்தின் நடவடிக்கைகளை அன்று தொட்டுச் அவதானித்து வந்திருக்கின்றனர் என்று தெரிகிறது. சென்ற செவ்வாய்க்கிழமை பகல் 11 மணியளவில் அவர் சுன்னாகத்திலும் மோட்டர்ச் சாரதிகளுக்கு ஓர் சொற்பொழிவு செய்தார். இதற்கிடையிற் பொலிசார், அவர் பொலிசார்க்கும் சாரதிகட்குமிடையே குரோதத்தை உண்டு பண்ணக்கூடியவிதமாகக் கருமம் ஆற்று[கின்]றார் என்றும், பொலிசார் கடமைசெய்யப்போனவிடத்து அவர்களைத் தடுத்தார் என்றும் குற்றச்சாட்டின்பேரில் அவர்மீது விருந்து பிறப்பித்து செவ்வாய்க்கிழமை தேடித் திரிந்திருக்கின்றனர் என்றும் அன்று பின்னேரம் 5 மணியளவில் அவர் வண்ணார்பண்ணைச் சிவன்கோவில் வீதிவழியாகச் செல்லும்போது பொலிஸ் பரிசோதகர் ஒருவரால் சிறையாக்கப்பட்டுக் கைவிலங்குடன் பொலிஸ் தானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்றும் இப்போது தெரியவருகிறது.

போலிசர் மோட்டர்ரதத்தில் ஏறிவந்து, ஸ்ரீ எதிர்வீரசிங்கத்தைக் சிறையாக்கி கைவிலங்கிட்டுப் பின்னும் தாம் ஏறிவந்த மோட்டர்ரதத்தில் ஏற்றிச் செல்லவில்லை அவரைக் கால் நடையாகவே, கைவிலங்குகளுடன் யாழ்ப்பாணத்துப் பிரசித்த வீதிகளின் வழியாக அழைத்துச்சென்றமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

இச்செய்தி காட்டுத்தீயெனப் பரவியதும், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, காரைநகர், பருத்தித்துறை, முல்லைத்தீவு முதலாம் இடங்களில் பிரயாணிகளை ஏற்றிச் சென்ற பஸ்ரதங்கள் உடனே பெரியகடை பஸ் காலைக்கு ஏகோபித்துத் திரும்பிவந்தன. நூற்றுக்கணக்கான சாரதிகள் பஸ் முகாமைக்காரர் பொலிஸ்தானமுன்றிலிற் குழுமினர் ஸ்ரீ எதிர்வீரசிங்கத்தைப்பிணையெடுக்கச் சென்றவர்களில், சுன்னாகம் விதானைக்கு மகன்முறைபூண்டுள்ள ஸ்ரீ தாமோதரம் பிள்ளை என்பவர் பொலிசாரால் முகத்தில் அடிக்கப்பட்டார் என்று சொல்லப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் நிற்கும் கொழும்பு நியாயவாதி திரு [illegible] பொன்னம்பலம் [illegible] எதிர்வீரசிங்கத்தைப்பிணையில் விடும்படி பொலிசரைக் கேட்டார் என்றும், அவர்கள் அவ்வேண்டுகோளை நிராகரித்து விட்டனர் என்றும் இப்போது தெரிகிறது

தம் தலைவர் சிறையில் இருக்கையில், தமது பஸ் ரதங்களைக் காலையில் இருந்து எடுக்கச் சாரதிகளும் முகாமைக்காரரும் மறுத்துவிட்டனர். எனினும் ஸ்ரீ எதிர்வீரசிங்கம் அவர்கள் உத்தாவின்பேரில், செவ்வாய்க்கிழமை யிரவு 11மணியளவில்தான் மோட்டர்பஸ்கள் காலையில் இருந்து எடுக்கப்பட்டன.

புதன்கிழமை காலைதொடக்கம் மோட்டர் பஸ்வண்டி ஒன்றுவது பிரயாணம் செய்யவில்லை. இதனாற் பிரயாணிகள் மிகுந்த கஷ்டம் அடைகின்றனர். சாரதிகளுக்கிடையே மிகுந்த ஆத்திரமேற்பட்டிருக்கிறது. ஏதும் குழப்பம் நேரிடாதபடி பொலிசார் பஸ்காலையைப் பாதுகாத்து நிற்கின்றனர்.

பிந்திக்கிடைத்த செய்தி.

*பொலிசார் கடமை செய்யப் போனபோது, அவரைத் தடுத்து, அவமானம் விளைக்கத்தக்கதாக ஏசித் தீங்குவிளைக்க எத்தனித்தார் எனபதே ஸ்ரீ எதிர்வீரசிங்கத்தின்மீதுள்ள குற்றச்சாட்டாகும்.*

*எதிரிக்காக நியாயவாதி ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலமும், நியாயதுரந்தரர் ஸ்ரீ கே. மகாலிங்கமும் ஏற்பட்டனர்.*

*சென்ற புதன்கிழமையன்று (நேற்று) பொலிசார் தாம விளக்கிற் சிறையாக்கிய ஸ்ரீமான் எதிர் வீரசிங்கத்திற்கு மாறாக வழக்குத் தொடரப் போவதாக அறிந்து, நீதிஸ்தலமுன்றில் எங்கணும் எள்ளிட இடமின்றிச்சனங்கள் குழுமியிருந்தனர்.*

*நீதிபதி, பொலிசார் ஸ்ரீ எதிர்வீரசிங்கத்தின் மீது பாரித்த குற்றங்கள் சிலவற்றிற்குப் போதிய ஆதாரமில்லையென நிராகரித்து, ஒரு குற்றத்தின்பேரில் அவரை 250 ரூபா பிணையில் விடுதலையாக்கும்படி உத்தரவிட்டார்.*

*நீதிபதியின் உத்தரவு, ஜனங்களிடை அதிக சந்தோஷத்தை யுண்டாக்கியது. இப்போது பொலிசார்க்கு மாறாக சகல [illegible] வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள் என்று அறிகிறோம்.*

*விடுதலையான ஸ்ரீ எதிர்வீரசிங்கம் அவர்கள் மாலையிடப்பெற்று ஊர்வலமாகச் சகல வரிசைகளுடன் அழைத்துச் செல்லப்பட்டார்.*

*இன்று காலை தொடக்கம் மோட்டர் பஸ்வண்டிகள் முன்போலவே பிரயாணிகளை ஏற்றிச் செல்கின்றன.*

### உலகம் பலவிதம்.

இடமின்மையால் விடப்பட்டது.

### நல்லூர் ஸ்ரீ கணேச வித்தியா விருத்திச் சங்கம்.

முதலாம் ஆண்டு நிறைவு விழா.

*இச்சங்கத்தின் முதலாவதாண்டு நிறைவுவிழா, நிகழும் ஸ்ரீமுக வருஷம் தைத் திங்கள் க-ம் நாள (14-1-34) ஞாயிற்றுக்கிழமை (உத்தராயண புண்ணிய காலமாகிய தைப்பொங்கற் பண்டிகைத் தினத்தன்று) மாலை ஆறரைமணியளவில், நல்லூர்ச் சந்திரசேகர விநாயகாலயத்துக்கு அணித்தாயுள்ள ஷெ சங்கமண்டபத்தில், இந்துசாதனப் பத்திராசிரியர் ஸ்ரீமாத். ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்களின் அக்கிராசனத் தலைமையில் நடைபெறும்.*

### தேகவியோகம்.

தமிழ் உபாத்திமைப் பரீட்சையிற் சித்தியடைந்து உபாத்தியாராக அதிக திறமையும் அநுபவமும் வாய்ந்தவரும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, கோப்பாய் அரசினர் ஆசிரியகல்லூரி, கோகாவலவைச் சேர்ந்த அம்பை அரசினர் தமிழ் வித்தியாசாலை என்னுமிவ் வித்தியா தாபனங்களில் தமிழ் உபாத்தியாயராகக் கடமை பார்த்து வந்தவருமாகிய காரைநகர் ஸ்ரீ. சி. தா. சிதம்பரப்பிள்ளை யவர்கள் சென்ற திங்கட்கிழமை (8-1-34) அதிகாலையில் காரையிலுள்ள தமது இல்லத்திற்றானே தேகவியோகமாயினர் என்னுஞ் செய்தியைக் கேள்வியுற்றுப் பெரிதுங் கவலைப்படுகின்றேம். ஸ்ரீ சிதம்பரப்பிள்ளை, யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிஸ்தலத்தில் முதலியாராகவுள்ள ஸ்ரீ C. ஆறுமுகத்தின் மாதலனவர். இவர் விடா முயற்சி ஊக்கம் அபிமானம் கடவுட்பத்தி முதலிய சுகுணங்கள் வாய்ந்தவர். கல்வி பயிற்றுவதில் திறமை யுடையவர், மாணுக்கராலும் ஏனையராலும் பாராட்டப்பட்டவர் இவருடைய அகால மரணம் பெரிதும் பரிதாபப்படத்தக்கது.

# வகுப்புவாதிகளின் ஆர்ப்பாட்டம்!

## ஐரோப்பியர் காட்டிய முன்மாதிரியா?

## பழைய பிரதமாசிரியரின் பிதற்றல்.

## பட்ட வேட்டையால் அடிமைத்தனமா?

## நகரசங்கத்தலைவர் தெரிவு.

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

கொழும்பு: 10-ம் தேதி

டொனமூர் அரசியற்றிட்டம் இலங்கையிற் புகுத்தப்பட்ட காலத்தில், அதனைத் திருத்தவேண்டும் அன்றேல் ஒழிக்கவேண்டும் என்ற பிரச்சினையே முக்கியமாக இருந்தது. ஐரோப்பியரை ஒழிந்த ஏனையசமூகத்தினர் யாவரும் இந்தப் புதிய அரசியற்றிட்டம் நாசமானது என்பதில் ஒற்றுமைப்பாடுடையவராயிருந்து மிஸ்ரர்: E. W. பெரீரா அக்காலத்திற் கொண்டுவந்த அரசியற்றிருத்தப்பிரேரணைக்குப் பூரண ஆதரவு அளித்தனர். ஆனால் 2 வருடத்தின்பின் நிலைமை முற்றாக மாறிவிட்டது. அரசியற் றிருத்தம் ஆவசியகம் எனப் பறைசாற்றிய சனப் பிரதிநிதிகள் யாவரும் இப்போது வகுப்புவாதிகளாய் அதற்கு மாறாகக் காணப்படுகின்றனர். சிறுபான்மைப் பிரதிநிதிகள்—அதாவது முஸ்லீம்கள், இந்தியர், பறங்கியர், தமிழர் ஐரோப்பியர் எனப்படுவோரின் பிரதிநிதிகள், அரசாங்க சபை மந்திர சபையினர் கொண்டுவந்த அரசியற்றிருத்தப் பிரேரணைகளுக்கு ஏகோபித்துப் பாதகராய் நின்றமை, இச்சூத்திரப் பாவைகளை ஆட்டுவிப்போர், மறைவாக நின்று கருமம் பார்க்கும் ஒரு சிலர் என்பதை நன்கு காட்டாநிற்கும்.

⁂

இலங்கை ஐரோப்பிய சங்கம், வர்த்தகமே தொழிலாகக் கொண்ட பிரிட்டிஷார் இங்கு கால்வைத்த காலந்தொட்டு தாபிக்கப்பட்டது. அச்சங்கம் இதுகாறும் ஆற்றிய கருமங்களிலிருந்து, இலங்கையில் அடிமைத் தன்மையை இறக்குவிப்பதற்கு எவ்வளவு முயற்சி செய்திருக்கின்றது என்பதுதெரியும். டொனமூர் அரசியற்றிட்டம் இங்கு புகுத்தப்பட்டபோது இச்சங்கம் இப்படியான அதிகாரங்களை அரசியல் விஷயத்தில் அநுபவம் படைக்காத இலங்கையர்க்கு அளிக்கலாமா? என்று ஒப்பாரிசொல்லி யழுதது. ஆனால் அதன் அழுகை முதலைக்கண்ணீரென்பது, பின்னர் அது ஆற்றிய கருமத்தினால் இருந்து தெரிகிறது. இப்போதும் தேசாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கவேண்டுமென்று கேட்டால், அப்படியுமாகுமோ என்று துள்ளிக் குதிக்கிறது. சிறுபான்மைக் கட்சியினரையும் தன்பக்கத்திற் சேர்த்துவிட்டதாகவும், அதன் மூலமாக இலங்கை அரசியற் றிருத்தத்திற்கு முட்டுக் கட்டைபோட்டதாகவும் இச்சங்கம இப்போது பெருமிதங்கொள்கின்றது

⁂

இந்த ஐரோப்பிய சங்கம் வெள்ளையதிகாரிகளின் அபிமானத்தைப்பெறுவதென்பது எல்லோருமறிந்த இரகசியம். எனவே அரசியற்றிருத்தத்திற்கு இச்சங்கம் முட்டுக்கட்டை இடுவது எவர்பொருட்டென்பது எல்லோருமறிந்த விஷயமாகும். இலங்கையின் செல்வத்தைச் சுரண்டுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கும் வெள்ளை வர்த்தகர், இலங்கை எவ்வளவுக்கெவ்வளவு அரசியல் விஷயத்தில் முன்னேற்றமடைகின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு தங்கள் வர்த்தகமும் கீழ்நிலைமையை அடையுமென்பதை நன்குணர்வார்களன்றோ? பாரதநாட்டில் தங்கள் குலத்தவர் செய்யும் சூழ்ச்சிகளையும், அவை சித்திபெறும் விதத்தையும் கண்ணாரக் கண்டும் காதாரக் கேட்டும் இருந்த வெள்ளை வர்த்தகர் கூட்டம் வாளாவிருக்குமா?

⁂

கொழும்பில் ஐரோப்பியராற் பிரசுரிக்கப்படும "ரைம்ஸ்" பத்திரிகை, நமது புதிய தேசாதிபதிக்குப் புத்திமதி கூற முற்பட்டுவிட்டது. சேர் றெஜினல்ட் ஸ்ரப்ஸ், முன்னர் இங்கே இராசமாகிதராயிருந்தவர்; அவர் அப்போது நிகழ்த்திய செயல்களை சில இன்னும் இலங்கையர் மனத்தை விட்டகலா. அப்படிப்பட்டவர் மீண்டும் தேசாதிபதியாய் வந்திருப்பதால் தன் பசப்புமொழிகளைச் செவிமடுப்பரென நீந்த வெள்ளைப் பத்திரிகை நுன்னத்தனமாக எண்ணியது போலும்! அரசாங்கசபையிலுள்ள ஜனப் பிரதிநிதிகளே தமக்கடாத விஷயங்களில் இதுகாறும் பிரவேசித்துவந்தனரென்றும் அதனாலேயே முன்னிருந்த தேசாதிபதி யதேச்சாதிகாரப் பிரயோகஞ் செய்தனரென்றும், புதிய தேசாதிபதியும் அவ்வாறே செய்வாரென்றும் இப்பத்திரிகை சொல்லாமற் சொல்லி விளக்குகின்றது. ஆனால் இந்த ரைம்ஸ் பத்திரிகை ஒரு விஷயத்தை மறந்துவிட்டதுபோலும்! அதிகாரவர்க்கத்தினர், அதிகார வெறிபிடித்து எவ்வளவுக்கெவ்வளவு யதேச்சாதிகாரம் செலுத்துகின்றனரோ, அவ்வளவுக்கவ்வளவு மக்களின் சுவதந்திரவாஞ்சை அதிகப்படுமென்பதையும் "ரைம்ஸ்" போன்ற பத்திரிகைகளின் சுயநல வார்த்தைகளே அயர்லாந்து, அமெரிக்கா, எகிப்து முதலாம் நாடுகளிலுள்ள மக்களின் சுவதந்திரத் தாகத்தை அதிகப்படுத்தி ஈற்றிற் சுவதந்திரம் பெறச் செய்தன என்பதையும் ரைம்ஸ் ஆசிரியர் அறிவாராக.

⁂

வெள்ளை அதிகாரிகளால் தூண்டப்பட்டு வகுப்புவாதத்தைக் கிளப்பிய வகுப்புவாத விஷமிகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை இட்டு விட்டனர் என்பது நிச்சயம். ஆனால், யாழ்ப்பாணத்தின் உண்மைத் தலைவராயுள்ள எவரும் இச்சதியாலோசனையிற் சிக்கித் தேசத்துரோகம் செய்ய முன்வரவில்லையென்பது ஆறுதலுக் கேதுவானதே. தாம் யாழ்ப்பாணத்தவர் என்று வாய்ப்பறை சாற்றிச் சிறுபான்மையோர் மகாநாட்டிற் பங்குபற்றியவர்கள் யாழ்ப்பாண மக்களின் ஆதரவைப் பெறாதவர்கள் என்பது நிச்சயம். புகையிரதஸ்தானங்களில் அவர்களுடைய மூட்டை முடிச்சுகளைத் தூக்கிச் செல்வோரை விட, அவர்களைப் பின்செல்வோர் யாழ்ப்பாணத்திலாயினும் தமிழ் மக்கள் வசிக்கும் எந்த இடத்திலாயினும் இல்லையென்று உறுதியாய்க் கூறலாம்.

⁂

யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் தாம் என்று சிறுபான்மையோர் மகாநாட்டுக்குச் சென்ற தான்றோன்றித் தம்பிரான்களில் ஒருவர் உபகாரச் சம்பளம் பெறும் பழைய பிரதமாசிரியர் ஓர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவின்போது, "இந்தியர் இந்த யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகளில் உபாத்திமைத் தொழில் செய்யவிடவொண்ணாது! அவர்களால் எம்நாட்டு வாலிபர் உத்தியோகமின்றித் திண்டாடுகிறார்கள்!" என்று ஒப்பாரி சொல்லி அழுதார். ஆனால் சிறுபான்மையினர் மகாநாட்டில், இந்தியரோடு சேர்ந்து, "ஆகா! நீங்கள் எங்கள் சகோதாரல்லவா? உம்மை நாங்கள் மறப்போமா? நீங்கள் எங்களை மறக்கலாமா? நாங்கள் எல்லோரும் சேர்ந்து, இந்தச் சிங்களர் அதிகாரம் வகிக்க விடவொண்ணாது" என்று பழைய உறவு பாராட்டி அட்டகாசம் புரிந்தாராம். தம் வாழ்விற் பெரும்பாகத்தைப் பட்ட வேட்டையிற் செலவழித்த இவர் அதிகாரிகளின் தூண்டுதலின் பேரில் இப்படி நிற்றல் ஆச்சரியமல்ல!

⁂

யாழ்ப்பாண நகரசங்கத்துப் பழைய தலைவரே பின்னரும் "ஏகமனதாய்த" தெரிவு செய்யப்பட்டனர் என்று எமக்கு இன்று கிடைத்த தந்திச்செய்தி ஒன்றினால் தெரிகிறது. குறித்த தலைவர் அவர்களின் பரிபாலனம் திருப்திகரமாயில்லாததினால், இன்னொருவரை அடுத்த வருடத்திற்கு நியமித்தல் வேண்டுமென்ற கிளர்ச்சி யாழ்ப்பாணத்தில் மும்முரமாக நடக்கின்றது என்னும் வதந்தி இங்கே சிலகாலமாக உலாவி வந்தது. எனவே, பழைய தலைவரே மீண்டும் "ஏகமனதாய்" தெரிவு செய்யப்பட்டமை பலருக்கு ஆச்சரியத்தையும் சிலருக்குச் சந்தோஷத்தையும் விளைத்திருக்கின்றது என்று கூறல் மிகையாகாது. எனினும், தலைவர், தாம் ஜனங்களின் ஊழியனேயன்றிக் குறித்த ஒரு சிலரின் நன்மைக்காக ஸ்தானம் வகிப்பவரல்ல என்பதை மனதிற்கொண்டு, சென்ற இரண்டு வருட காலமாக ஏதும் ஊரவர்களுக்கு மாறான கருமங்களை ஆற்றியிருந்தால், அவற்றையெல்லாம் நீக்கி, ஊரவர்களின் நன்மதிப்பைப் பெறுவர் என்று இங்கே நம்பப்படுகிறது. இனி 6-ம் வட்டாரப் பிரதிநிதியானவர் உபதலைவராக ஏகமனதாயே தெரிவு செய்யப்பட்டமை விசேஷமாக அவ்வட்டாரத்தார்க்கும் பொதுவாக நகரத்துக்கும் நன்மைபயக்க ஏதுவாகும் என்றும், அவர் முன்னரைக் காட்டிலும் விசேஷ சிரத்தையெடுத்து "நரகலோகம்" எனக்கிடக்கும சில இடங்களை நன்னிலைப்படுத்தத் தலைவர் அவர்கட்கு உதவி செய்வார் என்றும் நம்பப்படுகிறது.

# உபதேச காண்டம்.

## ஆறுவது
## உருத்திராக்க மான்மியச் சருக்கம்.

[எஉ-ம் இலக்கப் (21-12-33) பிரசுரத்தொடர்ச்சி]

"கருமநதைபாற்றங்கரையிலே எல்லாவகையான செல்வங்களோடுங்கூடிய ஆபிடம் என்னும் பட்டினம் உண்டு. அந்தப் பட்டினத்திலே விச்சுவசுத்தன் என்னும் வணிகனொருவன் இருந்தான்; அவன் நீதியோடும் தருமச்செயல்களோடுங் கூடியவன்; சிவவேடம் புனைந்தோரைச் சிவமெனப் பாவித்து, எதிர்சென்று வணங்கி உபசாரத்தோடு தன் இல்லத்திற்கு அழைத்துவந்து திருவமுது செய்வித்து அவர்கள் வேண்டுவன ஈந்து குறிப்பறிந்து குற்றேவல்செய்து அவர்களுடைய ஆசியையும் அருளையும் பெறுபவன். அந்த வணிகர்திலகன் சிவனடியார்க்குத் திருவமுதளித்தல் உடை கோவணம் முதலியன உதவுதல் தொண்டுசெய்தல் என்னும் இவைகளோடு மாத்திரம் அமையாது, அந்தமான வழியில் தண்ணீர்ப்பந்தல்அமைத்தல், நிழன்மரம் உண்டாக்குதல் கிணறுதோண்டுவித்தல், தருமத்தின்பொருட்டுச் செந்நெல் வயல்களை வகுத்துவிடுதல், முதலாஞ் சற்கருமங்களையுஞ் செய்துவந்தான்; எந்த நேரமுஞ் சிவன்றிருவடித் தியானமன்றி வேறு எவையும் அவன் சிந்தையில் ஏறமாட்டா; அவனைக் கருணையின் வடிவுகொண்டவன் என்று சொல்வது தகும்.

இவ்வாறான தவத்தைப் பூண்ட விச்சுவசித்தன் புண்ணிய தீர்த்தமாகிய கங்கையில் மூழ்கவேண்டுமென விருப்பங்கொண்டு, எருது, கழுதை, ஒட்டகம் முதலிய மிருகங்களின்மீது சரக்குப்பொதிகளைச் சுமத்தினான். அப்படிச் சுமத்தும்போது ஒரு கழுதையின் முதுகில் உருத்திராக்கமணிப் பொதியையும் ஏற்றினான்; இவ்வகையான பொதிகளை அம்மிருகங்களின்மேற் சுமத்திக்கொண்டு பல காததூரம் நடந்துசெல்ல, விந்தமலை எதிர்ப்படுதலும் அந்த விந்தமலைச் சாரலில் ஏறிச்செல்லும்போது, உருத்திரமணிப் பொதியைச் சுமந்து சென்ற கழுதை காலிடறிக் கீழே வீழ்ந்து உயிர்மாண்டது. மாண்ட கர்த்தபத்தின் உயிரை யமதூதன் கவர்ந்து செல்ல, கைலைமலையிலுள்ள சிவகணத்தவர் இடையிற் சென்று யமதூதனைத் தடுத்து அக்கழுதையின் உயிரை அவனிடமிருந்துமீட்டுத் தாம் சிவலோகத்திற் கொணர்ந்து எம்பெருமான் சந்நிதானத்திற் சேர்த்தனர், அவ்வுயிர் உருத்திரவடங்களைக்கொண்ட பொதியைச் சுமந்த புண்ணியத்தினால், சாமீபபதம்பெற்று நூறுபிரம கற்பகாலம் அங்கு இனிது வாழ்கலயிற்று; ஆகலான், முனிவர்களே, உருத்திராக்க மகிமை முழுவதும் எம்மால் எடுத்துச் சொல்லுந் தரத்ததன்று" என்று சூதமகா முனிவர் கூறினர்.

இங்ஙனஞ் சூதமகாமுனிவர் சொல்லக்கேட்ட நைமிசவன முனிவர்கள் தம் மனத்திற் பத்தி பெருக மிக்க விநயத்தோடு அம்மகாமுனிவரை நோக்கி, 'சுவாமீ, முன்னர், விபூதியே சகல இஷ்ட சித்திகளையும் மேலான பதவிகளையும் தருமென்று எங்களுக்குச் சொல்லியருளினீர்; அங்ஙனம் விபூதி தாரணமே மேலான கதிகளையெல்லாந் தருமென்றால், பின்னர் உருத்திரமணியையும் புனைதல்வேண்டுமென்பது எதன்பொருட்டோ, தேறுகிலேம்; விளக்கியருளவேண்டும்' என்று வினவினர். அதற்கு முனிவர் பின்வருமாறு சொல்லுகின்றார்:

"முனிவர்களே, திருநீறு மேலான கதிகளையெல்லாந் தரவல்லதென்பது மெய்; ஆனாலும், சரீரம் வியர்த்தலால், முழுகுதலால், மழையில் நனைதலால், சனக்கூட்டத்துட் புகுந்து கலத்தலால், இன்னபிற ஏதுக்களால் ஒருவர் தம் உடம்பிலேபூசிய விபூதி அழிந்துவிடுதல்கூடும்; அப்படியான சமையத்தில் அவ்விபூதி பழிப்பெற்றவர் கொடிய பூதம் பைசாசம் அரக்கர் முதலிய தீயோரால் துன்பமடைதல்கூடும்; அந்தச் சமையத்தில் ஞானமயமாகிய உருத்திராக்கமணியொன்றையேனும் அணிந்திருந்தாலும் மேலேசொல்லப்பட்ட பூத பைசாசங்களால் எவ்வித இடரும் நேரமாட்டா. ஆகலினாற்றான் விபூதியோடு உருத்திராக்கத்தையுந் தரித்தல்வேண்டுமெனக் கூறினேம்" என்று சமாதானம் கூறிப் பின்னரும் இதற்கு உதாரணமாக ஒரு சரித்திரஞ் சொல்லுகின்றார். —(வரும்)

# இந்தியச் செய்திகள்.

—(*)—

1-ம் பக்கத் தொடர்ச்சி

லட்சங்கணக்கான மக்களை நோக்கி, "நீவிர், ஹரிஜனங்களுக்கு எஜமானர்கள் அல்ல; சகோதரரே என்பதை நன்கு உணர்ந்து அவர்களுக்கான எல்லா உதவியையும் செய்யுங்கள்" என்றார்.

## ஐக்கியமாகாணத்தலைவர் ஆலோசனை.

ஐக்கியமாகாணத்துத் தேசியமகாசபைத் தலைவர்களான ஸ்ரீ பிரகாஸ், ஸ்ரீமத்சுவாமி சம்பூரணனந்தா, பண்டிதர் ஹரிஹரநாதசாஸ்திரி முதலியோர் சென்ற ஞாயிற்றுக்கிழமை பண்டிதர் ஜவஹர்லால் நேருவுடன் அரசியல் விஷயமாகப் பேசினர் என்று தெரிகிறது.

## இந்தியர்க்குத் தேசாதிபதிப் பதவி

சென்னைத் தேசாதிபதியான சேர் ஜோர்ஜ் ஸ்ரான்லி அவர்கள் இராசப் பிரதிநிதியாகக் கடமை பார்க்கையில், அவ்விடத்திற்காக, சேர் மகமது உஸ்மான் அவர்கள் சென்னை மாகாணத் தேசாதிபதியாய் நியமிக்கப் பட்டிருக்கிறார். மிகப் பிரதானமான மாகாணம் ஒன்றிற்குத் தேசாதிபதியாய் நியமிக்கப்பட்ட முதல் இந்தியர் சேர் உஸ்மானேயாவர்.

# ஸ்ரீமுகஹூ தைமாச நக்ஷத்திர ராசிப்பலன்.

[பிரமஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் வாக்கிய பஞ்சாங்கத்திற் கண்டபடி.]

அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்களிற்பிறந்தவர்களுக்கு.

இனப்பிரிவு, ஸ்திரீ வழிச் சுகம், பாக்கியப்பேறு, முயற்சிப் பலிதம், மங்கல காரியம், சயனபோசன சுகம்.

கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரைகளிற் பிறந்தவர்களுக்கு:

சுதந்திரப் பேச்சு, நாமதத்திற் காரியசித்தி, மனக்கவலை, கல்விச்சிறப்பு, பயிர்ப் பலிதம், அந்நியர் உதவி, தொழிற் சிதறுதலை, பயனற்ற பிரயாசம், பித்தரோகம்.

மிருகசீரிடப் பின்னரை திருவாதிரை புனர்பூச முன்முக்கால்களிற் பிறந்தவர்களுக்கு:

இராச அனுகூலம், பெரியோர் உறவு, ஆராய் வின்மை, கலகம், நோய் மிகுதி,

புனர் பூசத்து நாலாங்கால் பூசம் ஆயிலியங்களிற் பிறந்தவர்களுக்கு:

பிரிய வார்த்தை, பந்துக்களாற் கவலை, அதிகபிரயாசம், கஷ்டமான சம்பாத்தியம், உதர பீடை,

மகம் பூரம் உத்தர முதற்கால்களிற் பிறந்தவர்களுக்கு:

சகோதரருக்குக் கஷ்டம், ரோகபயம், தருமச் செலவு, பகையுண்டாகி நீங்கல்,

உத்தரப் பின்முக்கால் அத்தம் சித்திரை முன்னரைகளிற் பிறந்தவர்களுக்கு:

குடும்ப சுகம், பொருட் சேதம், முயற்சியின் பொருட்டு அதிக செலவு, இனத்தாரால் நன்மை.

சித்திரைப் பின்னரை சோதி விசாகத்து முன்முக்கால்களிற் பிறந்தவர்களுக்கு:

தேக மெலிவு, பந்துக்களுள் அன்பம், புத்திரர் சிறப்பு, சிநேகிதராற் சுகம், தலதீர்த்த யாத்திரை.

விசாகத்து நாலாங்கால் அனுடம் கேட்டைகளிற் பிறந்தவர்களுக்கு:

சகோதரருடன் விரோதித்து பின் ஒற்றுமையாதல், இனத்தார் உதவி, பிதாவழி நஷ்டம்.

மூலம், பூராடம், உத்திராட முதற்கால்களிற் பிறந்தவர்களுக்கு:

தை மாதத்தில் அதிக செலவு, தொழில் நஷ்டம், ரோக பயம், அதிக கஷ்டம்.

உத்தராடப் பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரைகளிற் பிறந்தவர்களுக்கு:

முயற்சிக் குழப்பம், பிரயாணக் கஷ்டம், வாக்குக் கலகம், கோப மிகுதி, சத்துரு பயம்.

அவிட்டத்துப் பின்னரை சதயம் பூரட்டாதி முன்முக்கால்களிற் பிறந்தவர்களுக்கு:

சுற்றத்தார்க்குள் மங்கல நிகழ்ச்சிகள், வஸ்திராபரணலாபம், அதிக செலவு, தொழில் நஷ்டம்.

பூரட்டாதி நாலாங்கால் உத்தரட்டாதி, ரேவதிகளிற் பிறந்தவர்களுக்கு:

பயிர்ப்பலிதம், கனதிர சுகக் குறைவு, சந்தோஷ வைபவம், லாபம்,

## அரிசிமீது வரி.

—:o:—

### பொக்கிஷ மந்திரியின் மறுப்பு

### அவர் கூறும் காரணங்கள்.

"இலங்கையில் இறக்குமதியாக்கப்படும் அரிசி மீது ஒவ்வொரு அந்தருக்கும் 25 சதம் வரி அறவிடவேண்டும்; அப்படி அறவிடப்பட்ட பணத்தை இலங்கையிற் கைத்தொழில் விருத்தியாக்குவதற்காக உபயோகித்தல் வேண்டும்" என்னும் கருத்துக்கொண்ட தீர்மானத்தைத் தாம் சமீபகாலத்தில் எடுத்தாளப் போவதாகப் பலப்பிற்றியாப் பிரதிநிதியான மிஸ்ரர் ஜி. ஒரூபர்ட். ட. சொயிஸா அறிவித்தல் கொடுத்திருந்தார்.

இப்படியான வரி விதிப்பதனால், இலங்கை விவசாயிகளுக்குச் சகாயம் ஏற்படும் என்றும், கைத்தொழிற் கல்வி விருத்தியடைய அரசிறையில் இருந்து பணம் எடுக்காது இதனையே உபயோகிக்கலாம் என்றும் மிஸ்ரர் சொயிஸா காட்டியிருக்கிறார்.

இந்தத் தீர்மானத்தை மறுத்துப் பொக்கிஷ மந்திரியான சேர். வில்பிரிட் ஹட்ஸ் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்: அதிற் பின்வருமாறு காணப்படுகிறது:

"கௌரவ அங்கத்தவர் குறிக்கும் வரி இலங்கை அரசிறைக்குச் சேரவேண்டியதாகும். அப்படிப்பட்ட வரியை, ஒரு பிரத்தியேகமான விஷயத்திற்கு உபயோகிக்கும்போது நாம் மிக்க சாவதானமாயிருத்தல் வேண்டும் என்று நான் அபிப்பிராயமுறுகின்றேன் ..........எனவே இத்தீர்மானத்தை அங்கீகரிக்க வொண்ணாதென நான் அரசாங்கசபைக்குச் சிபாரிசு செய்கிறேன்."

## இலங்கை வருமானவரி.

### 1935-ல் வரிமாற்றம்.

1935-ம் ஆண்டு தொடக்கம், ஆண்டு தோறும் 2400 ரூபா வருமானம் உள்ளவர்களுக்கும் வரி விதிக்கப்படும் என்று அறிகிறோம்.

## அநுராசபுரத்திற் சின்னம்மை.

அநுராசபுரத்திற் தொற்றுநோய்கள் பரவிவருகின்றன என்று அறிகிறோம். பொக்கழுப்பன், சின்னம்மை முதலாம் நோய்கள் அநேகரைப் பிடித்திருக்கின்றன என்று ஓர் செய்தி கூறுகிறது.

## 102 வயதுக் குரவரின் மரணம்.

மொரட்டுவாவில் கிறிஸ்தவ போதகராயிருந்து இளைப்பாறிய ஜூலியான் ட. சில்வா என்பவர் சென்ற ஞாயிற்றுக்கிழமை தேகவியோகமாயினரென்று அறிகிறோம். இவர் இறக்கும்போது வயது 102. 100-ம் வருட ஜெனன விழாவை இவர் கொண்டாடியபோது, இலங்கைத் தேசாதிபதி முதலாம் பிரமுகர் அவருக்கு வாழ்த்துச்செய்தி அனுப்பியிருந்தனர்.

## இலங்கைமன்னர் சிம்மாசனம்.

இலங்கை மன்னருடைய சிம்மாசனம் இப்போது பிரிட்டிஷ் மன்னர் மாளிகையில் இருக்கின்றது; அதைத்திருப்பித்தரல் வேண்டும் என இலங்கை அரசாங்க சபையங்கத்தவர் கேட்டகேள்விக்கு பிரதமகாரியதரிசி பின்வருமாறு விடையளித்திருக்கிறார்:-

"இலங்கை அரசாங்கசபையினரின் கோரிக்கைகள் பிரிட்டிஷ் அரசினர்க்குச் சமர்ப்பிக்கப்படும்."

என்னே விடையின் தன்மை! எடுத்த பொருளைத் திருப்பித் தருதற்கு இவ்வளவு கஷ்டமா?

## இலங்கை - இந்திய டெலிபோன்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் கடலின்கீழ் டெலிபோன் கம்பி அமைப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கு 350,000 ரூபா செலவாகுமென மதிப்பிடப் பட்டிருக்கிறது. கம்பியமைக்கும்வேலை மார்ச்சுமாதத்தில் ஆரம்பமாகுமென்றும் ஜூன்மாசத்தில் பேசக்கூடியவிதமாக முடிவுபெறுமென்றும் சொல்லப் படுகிறது. செலவினைர பாதி இலங்கையரசினராலும், மற்றரைவாசி இந்திய அரசினராலும் கொடுக்கப்படுமாம்.

## இலங்கை அரசாங்கசபை.

### கூட்ட நிகழ்ச்சி முறை.

இலங்கை அரசாங்க சபையின் கூட்டம் இன்று வருகிற வெள்ளிக்கிழமை 12-ம் தேதி அரசாங்க சபை மண்டபத்திற் கூடும்.

கொழும்புத் துறைமுகத்திற்கு உதவி என்சினியராக மாதம் 750 ரூபா சம்பளத்தில் ஓர் இலங்கையரை நியமிக்கவேண்டுமென்று போக்குவரவுப் பகுதி மந்திரியான கௌரவ மக்கான் மரக்காயர் அவர்கள் அரசாங்கசபையைக் கேட்பார்.

இன்னும் இந்த மந்திரி ஸ்ரான்லி மின்சார நிலையத்தை விருத்தி செய்வதற்காக 690,000 ரூபா கேட்பர்.

## பிரதிநிதிகள் யார்?

(௩-ம் பக்கத் தொடர்ச்சி.)

காலம் ஏற்படுத்தப்படுகின்றன. அவ்வக்காலங்களில் எந்தெந்த முறைகள் சரியெனக் காணப்படுகின்றனவோ அந்தந்த முறைகளை அரசாட்சியார் அநுசரித்து வற்புறுத்துவார்கள். அந்த முறைகளை அநுசரிக்காதவர்களுக்கு தண்டனை விதிப்பார்கள். அநுபவத்தில் சில விதிகள் முரண்படும்.

மலகூடங்கள் கிறவி சூழைகளைச் சரியாகச் சுத்திகரம் பண்ணி வருவதற்கு வேண்டிய வழி வகைகள் செய்தால் மலகூடங்களால் சுகாதாரத்துக்கு நன்மையுண்டென்பதற்கு ஐயமில்லை.

வரியிறுப்போராகிய நாங்கள் மலகூடங்களை நிறுவுவது கடனாகும். சுத்திசெய்யும் வழிவகைகளைத் தேடுவது நகரசபை உத்தியோகஸ்தர்களின் கடனாகும். இவ்விஷயத்தில் இரு பகுதியாரும் ஒத்துழைக்கவேண்டும். நான் சென்ற நகரசபைக் கூட்டத்தில் மலகூடம் கட்டாதவர்களில் வழக்குத் தொடருமுன் புதிதாக இரண்டுமாத அறிவித்தல் எழுத்துமூலமாகக் கொடுக்க வேண்டுமென்றும் இரண்டுமாத முடிவில் கட்டத் தகுதியவர்களுக்கு மலகூடங்கள் எளிதான செலவில் நகரசபைப் பொறுப்பில் கட்டுவித்து முடிந்த செலவை காலத்துக்குக் காலம் சிறுத்தொகைகளாக பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இரண்டுமாதம் வரைக்கும் வழக்குகள் தொடராமல் நிற்பாட்ட வேணுமென்றும் ஒரு பிரேரணை கொண்டுவந்தேன். அப்பிரேரணையை ஆதரிப்பாருமில்லை அங்கீகரிப்பாருமில்லை. நான் ஏதேனும் சுயநலங் கருதியேனும் மலகூடங்கள் ஆகாதென்ற கருத்துடனேனும் அப்பிரேரணையைக் கொண்டுவந்தேனல்லன்.

குறித்த கூட்டத்து முதற் சனிக்கிழமையிலன்று ஒரு நிரானான ஏழைச் சனங்கள் மலகூடங்கள் கட்டவில்லையென்னும் குற்றச் சாட்டினால் தண்டனைகள் விதிக்கப் பட்டமையைக் கண்ணாரக் கண்டு அவர்களின் தம் மற்றோரினதும் கேள்விக் கிணங்கி அப் பிரேரணையைப் பிரேரித்தேன்.

யான் எக்காலமும் என்னைப்போன்ற மன்னுயிர்க் கெல்லாம் எனது இடம் பொருள் ஏவல் உடல்வலி மனோவலி உள்ளமட்டும் என்னாலியன்ற சேவை செய்ய ஆயத்தமுள்ளவனாயிருக்கிறேன் யான் சனசமூக சேவையில் யாதும் ஓரமாகவேனும் சுயநலம் கருதியேனும் செய்திருந்தேனாகில் அவற்றைத் தெரிவிக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

வரியிறுப்போர் மகாநாடும் வரியிறுப்போர் மத்திய சங்கமும் மலிர்ந்து பொலிந்து நீடூழி வாழ்க. சுபம்! சுபம்! சுபம்!

இங்ஙனம்,
தங்கள் ஊழியன்,
6-ம் வட்டார அங்கத்தவன்,
(ஒப்பம்) க. ஐயாத்துரை.

"காண்டிநேண்டல்"
கம்பெனியின் தொழில்
வருமானம் Rs 1,500,000.
ஜீவிய நிதியில் சேருங்கள்.
மாதம் ரூபா 2.
10 வருஷத்தில் ரூபா. 500
ஆதாயம் பெறுவீர்கள்.
ஏழைகளும் செல்வரும்
விரும்பக்கூடிய கம்பெனி.
கிளை ஆபீஸ்கள்: சாவகச்சேரி, கண்டி, மட்டக்களப்பு.
E P. புயூஎல், உடுவில், மானிப்பாய்,
இலங்கைப் பிரதம பரிசோதகர்,
(H. 77. 17-8-33 to 16-2-34.)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டவோச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மு. ஈ. மு. சே. சேவுகன் செட்டியாரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1932-ம் ஆ ஆகஸ்டு

| இல. | இச. | ரூ | ச | ஊர் | பெயர். | நகைகளின் விபரம். |
|---|---|---|---|---|---|---|
| 34 | 20 | 75 | | ஆனைக்கோட்டை | வே. செல்லையா | முகப்பில்லாத பீலிக்காப்பு சோடி 1 |
| 53 | ,, | 8 | | கோப்பாய் | சு. சுப்பிரமணியம் | இமி சில கல் திருகில்லாத தோடுசோடி 1 |
| 68 | ,, | 45 | | கைதடி | சி. முருகேசு | தகிவு சம்பிப்பூரானட்டியல் 1 |
| 79 | 21 | 13 | | கைதடி | வே. நாகலிங்கம் | இமி தோடு சோடி 1 |
| 94 | 22 | 10 | | வண்ணார்பண்ணை | கா. தம்பமுத்து | இமி உருச்சு 1 |
| 98 | ,, | 24 | | கொக்குவில் | வே. தம்பு | செடிவேலைசெய்த பவுண்காசு 1 |
| 200 | 25 | 25 | | மண்டைதீவு | வ. வேலுப்பிள்ளை | கில்லரா உருப்படியுடன் இழ தாலிக் [கொடி 1 |
| 283 | 28 | 8 | | நவாலி | த. சரவணமுத்து | T. S. வில்லைச்போட்ட மோதிரம் 1 |
| | | | | செப்டெம்பர் | | |
| 417 | 1 | 28 | | சங்கானை | சு. வயிரமுத்து | இமி பதக்கம் 1, ஒ௦டி குச்சிசோடி 1, முகப்பு1 |
| 431 | 2 | 10 | | மீசாலை | அ. தம்பையா | ஒரு திருகில்லாத இமி தோடு சோடி 1 |
| 722 | 11 | 8 | | சங்கானை | சு. வயிரமுத்து | இமி டிம்மியுடன் மளுக்கன்கல் பதக்கம் 1 |
| 746 | 12 | 10 | | நீர்வேலி | வ. இராசா | இமி நீலக்கல்மோதிரம் 1 |
| 796 | 13 | 6 | | ஆரியகுளம் | அ. ஆறுமுகம் | இமி குச்சி சோடி 1 |
| 827 | 14 | 55 | | பெரியகடை | இ. பரமலிங்கம் | இமி பதக்கத்துடன் முருச்சுக்குத்தியட்டியல்1 |
| 859 | 15 | 85 | | மானிப்பாய் | க. சோமசுந்தரம் | இமி சிகப்புக்கல் பதக்கம் 1 |
| 876 | 16 | 70 | | ஆரியகுளம் | அ. ஆறுமுகம் | சிகப்புக்கல் பெண்டன் 1 |
| 877 | , | 90 | | ,, | ,, | வயிரச்சன்னம் 6 கட்டிய தோடு சோடி 1 |
| 879 | ,, | 35 | | ,, | ,, | ஒரு வயிரச்சன்னங்கட்டிய மோதிரம் 1 சிகப்புக்கல் மோதிரம் 1 |
| 880 | ,, | 30 | | ,, | ,, | வளசில் காப்பு சோடி 1 |
| 899 | ,, | 70 | | மல்லாகம் | வீ. சங்கரப்பிள்ளை | செடிவேலைசெய்த டலர் 1 |
| 900 | ,, | 90 | | ,, | ,, | டைமன் காப்பு சோடி 1 |
| 901 | ,, | 85 | | ,, | ,, | இமி முகப்புடன் செட்டிக்காப்பு சோடி 1 |
| 902 | ,, | 80 | | ,, | ,, | பட்டணக்காப்பு சோடி 1 |
| 927 | 17 | 14 | | சாவனை | சி. மாணிக்கம் | தகிவு பெட்டிமோதிரம் 1 |
| 948 | 18 | 8 | | தட்டாதெரு | சி. சின்னையா | இமி தோடு சோடி 1 |
| 950 | ,, | 9 | | தட்டாதெரு | வ. சிவக்கொழுந்து | பிரான்சுக்காசு 1, காதுக்குச்சு சோடி 1 |
| 972 | ,, | 180 | | மல்லாகம் | வீ. சங்கரப்பிள்ளை | செட்டிக்காப்பு சோடி 2 |
| 974 | ,, | 50 | | ,, | ,, | சம்பிப்பூரானட்டியல் 1 |
| 978 | 19 | 80 | | வெள்ளாந்தெரு | கு. செல்லையா | இமி முகப்புடன் அச்சுக்காப்பு சோடி1 |
| 1153 | 26 | 35 | | வெள்ளாந்தெரு | கா. செல்லத்துரை | இமி சில முத்தில்லாத சவுத்தோர்1 ஒ௦டி சில கல்லில்லாத சவுத்தோர் 1 ஒ௦டி தோடுசோடி 1 |
| 1174 | ,, | 90 | | சிறும்பியடி | சி. வைத்திலிங்கம் | இமி பதக்கத்துடன் செட்டிப்பூரானட்டியல்1 |
| 1176 | ,, | 45 | | அச்சுவேலி | சு. பொன்னையா | தகிவு முருச்சுக்குத்தியட்டியல் 1 |
| 1261 | 30 | 12 | | வண்ணார்பண்ணை | கா. குழந்தைவேலு | இமி பதக்கம் 1 |
| | | | | அக்டோபர் | | |
| 1350 | 4 | 16 | | சிறுப்பிட்டி | க. வேலுப்பிள்ளை | பெட்டிமோதிரம் 1 |
| 1491 | 10 | 12 | | கொக்குவில் | சி. முத்தையா | ஆடுத்தன் மோதிரம் 1 |
| 1552 | 13 | 50 | | கொக்குவில் | வ. அ. வல்லிபுரம் | பீலிக்காப்பு சோடி 1 |
| 1563 | 13 | 5 | | வண்ணார்பண்ணை | சு. சின்னத்துரை | இமி காதுப்பூ சோடி 1 |
| 1617 | 16 | 11 | | சோனகதெரு | கா. அப்துல்காதர் | ஒன்று ஒடிந்த அலுக்குத்து 7 |
| 1636 | 17 | 19 | | தட்டாதெரு | சி. ஐயாத்துரை | இமி மோதிரம் 1 மளுக்கன்கல் உருப்படி 6 |
| 1739 | 22 | 65 | | சோனகதெரு | சே. சுலுத்தானப்துல்காதர் | மணிக்கோர்வை 2 தம்பித்தோழுனுடன் சலங்கைக்கோர்வை 1 |
| 1770 | 24 | 10 | | வல்வெட்டி | ச. தம்பு | இமி சில முத்து டிம்மி இல்லாத பதக்கம் 1 |
| 1828 | 26 | 22 | | திருநெல்வேலி | த. சண்முகம் | சங்கிலி அட்டியல் 1 |
| 1866 | 28 | 8 | | தட்டாதெரு | சி. தாமோதரம்பிள்ளை | குச்சி உம்மிசம் 6 |
| 1881 | 29 | 14 | | சிறும்பியடி | சி. வைத்திலிங்கம் | வளசல் காப்பு 1 |
| 1906 | 30 | 10 | | வண்ணார்பண்ணை | வே. சுப்பிரமணியம் | சிகப்புக்கல் தோடு சோடி 1 |
| 1912 | 30 | 25 | | சோனகதெரு | சே சுல்தானப்துல்காதர் | பழுது திருகுசரை இல்லாத மூன்றுபட்டு மணிக்கோர்வை 1 |
| | | | | நவம்பர் | | |
| 1946 | 1 | 225 | | வண்ணார்பண்ணை | மு. தாமோதரம்பிள்ளை | வயிரச்சன்னம் 6 கட்டிய தோடு சோடி 1 சிகப்புக்கல் சவுத்தோர் ஒன்று |
| 2079 | 7 | 16 | | கோப்பாய் | சு. கந்தையா | குண்டுவைத்த கோட்டை அலாப்பவுண்காசு 2, குச்சி உமிசம் 2 வாளி உருப்படி 2 |
| 2114 | 9 | 12 | | சிவியாதெரு | சு. கதிரவேலு | முத்துக்கட்டிய தோடுசோடி ஒன்று |
| 2138 | 10 | 21 | | சங்கானை | சு. வயிரமுத்து | நட்டுக்கடுக்கன் சோடி ஒன்று |
| 2162 | 12 | 6 | | தட்டாதெரு | ச. சிகனையா | இமி குச்சிசோடி ஒன்று கொண்டைப்பூ 1 |
| 2189 | 13 | 70 | | உரும்பராய் | வே. இராசையா | இமி முகப்புடன் செட்டிக்கொலுசுசோடி1 |
| 2215 | 14 | 100 | | வேலணை | க. முத்தையா | இமி முகப்புடன் அச்சுக்காப்பு சோடி ஒன்று |
| 2222 | 15 | 110 | | வெள்ளாந்தெரு | கா. செல்லத்துரை | இமி பதக்கத்துடன் செட்டிப்பூரான் சங்கிலி ஒன்று (அட்டியல் ஒன்று |
| 2224 | 15 | 110 | | ,, | ,, | |
| 2246 | 16 | 42 | | பலாலி | அ. பிரான்சேஸ் | இமி மோதிரம் 2 ஒ௦டி நீலக்கல் மோதிரம் ஒன்று சிவாவர்பெட்டி மோதிரம் 2 |
| 2283 | 18 | 60 | | ஆரியகுளம் | அ. ஆறுமுகம் | அருணாக்கொடி ஒன்று, இமி மோதிரம் ஒன்று |
| 2324 | 20 | 13 | | தாவடி | சி. பொன்னையா | பெட்டிமோதிரம் ஒன்று |
| 2336 | 21 | 5 | 50 | சிறும்பியடி | சி. வைத்திலிங்கம் | இமி மோதிரம் ஒன்று |
| 2397 | 25 | 12 | | தாவடி | சி. பொன்னையா | பெட்டிமோதிரம் ஒன்று |

விற்பனவு:—ஸ்ரீமுகவஸூ தைமீ 14-ந் தேதிக்குச் சரியான (27-1-34) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறீசலாக மிதுதி ஒ௦டி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

(Mis. 178, 8—11-1-34)

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

கோடைகாலத்திற் பீடிக்கும்
தலைவலியைத் தடுப்பதற்காக
ஒரு போத்தல்
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்
தைலத்தை
வாங்கி வைத்திருங்கள்.
இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்.
(Y 18. 11-2-33—10-2-34.)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna.